## நாடு வியக்க நல்லாட்சி நடத்தும் நாயகருக்கு

# நன்றிகள் கோடி நவில்கிறேன் நான்!

கழகத்தின் பவளவிழா
கட்சியின் முப்பெரும் விழா
இரண்டும் இணைந்து,
முதற்பெரும் விழாவாக
மூண்டு எழும் பகுத்தறிவுக் கனல்மணக்க
முத்திரை பதித்து முடிந்திருக்கிறது–
மூன்று நாள் முன்பு!

கால் கொண்டு நடக்கும்
கழகத்தின் அதிசயமாக
வேல் கொண்டு நடக்கும்
வீரத்தின் விளைநிலமாக
சூல் கொண்டு நடக்கும்
சுந்தரத் தமிழ்மேகமாக
சுடர் கொண்டு நடக்கும்
ஞாயிற்றின் பேரொளியாக
திக்கெல்லாம் புகழ்நாட்டித்
திகழ்கின்ற
திராவிட மாடல் தத்துவத்தின் தளகர்த்தர்
தமிழக முதலமைச்சர்
நெஞ்சைப் பிணிக்கும்
நீடுரை ஆற்றி
செஞ்சொல் வாணராய் நம்
சிந்தையைக் கவர்ந்துள்ளார்.

‘கழகத்தின் வெள்ளிவிழா
நடைபெற்ற போதும்
பொன்விழா நிகழ்ந்து
பொலிவுற்ற போதும்
ஆட்சியில் இருந்தது
திமுக தான்.
இன்று
பவளவிழாக் கண்டு
பரவசப்படும் போதும்
ஆட்சியில் இருப்பது திமுக தான்.

நூற்றாண்டு விழாவைக்
காண்கின்ற போதும்
ஆட்சியில் இருக்கப் போவது திமுக தான்’
என்று
நன்னம்பிக்கை முனையில் நின்று
நட்சத்திர உரையாற்றி இருக்கிறார்
நம் தலைவர்.

தலைவா...
நீர் உயர உயர
நீராம்பல் உயர்வது போல
அனுபவம் உயர உயர
உன் சொல்லாட்சித் திறனுயர்ந்து
எங்களை சொக்கவைக்கிறது தலைவா!

காலத்தை வென்ற
கலைஞரின் குரலை மட்டுமா நீ
பெற்று வைத்திருக்கிறாய்
அவரின்
காந்தக் கலையையும் நீ
கற்று வைத்திருக்கிறாய் தலைவா!

கடலனைய கூட்டத்தையும்
கட்டிப் போடும் ஆற்றலை
கலைஞரைப் போலவே
காண்கிறேன் நான்– உன்னிடத்தில்!

மிடுக்குப் பார்வையில் நீ
தொடுக்கும் வார்த்தைகளின்
அடுக்கில் நிமிர்கிறான்
அடிமட்டத் தொண்டன்!

தேன் கலந்த சொற்கள்
திகட்டாத மொழி
திசைகளை நோக்கித்
திரும்பும் விரல்கள்

தேவைக்கு ஏற்ப
‘திடீர்’ தீப்பொறிகள்
மாசு கலவாத
மங்கலச் சொற்றொடர்கள்

கவனத்தை ஈர்க்கும்
களவெற்றித் தகவல்கள்
நாளையைப் பற்றிய
நம்பிக்கைப் பார்வைகள்

கொள்கை முழக்கும்
குத்தீட்டிப் பிரகடனங்கள்
எதிரியை அதிரவைக்கும்
இலட்சியத் தாக்குதல்கள்
என்று–

ஒற்றைக் குரலெடுத்து
ஓராயிரம் மின்னல்களை
உண்டாக்கி விட்டுத்தான்
ஓய்கிறாய் தலைவா நீ!

அமெரிக்கத் திருநாட்டில்
சிகாகோ நகரில்
நீ ஆற்றிய அற்புத உரை,
தமிழ்நாட்டுத் தமிழர்க்கு
மட்டும் நீ
முதல்வர் அல்ல–



ஒட்டுமொத்த
உலகத் தமிழர்களுக்கும்
ஒரே முதல்வர்
நீதான் என்பதை
உரக்கச் சொல்லியிருக்கிறது.

வரலாற்றுச் சிறப்புமிக்க
ஒரு பயணத்தில்
வானையே தொடுமளவுக்கு
வளர்ந்து நின்றது–
உன் உரை வீச்சு!
தேனையே தோற்கடிக்கும் அளவுக்கு
தித்தித்திருக்கிறது
உன்
திராவிடப் பேச்சு!

இன்றைக்குச் சரியாக
131 ஆண்டுகளுக்கு முன்னால்
இதே செப்டம்பர் மாதத்தில்
சிகாகோ நகரில் உரையாற்றிச்
சிகரம் தொட்ட
வீரத் துறவி
விவேகானந்தர் போல–

உன்னதமான உன் பேச்சு
உலகத் தமிழர்களின் உள்ளத்தை
உருக்கி விட்டது–
உணர்ச்சிகளைப் பெருக்கி விட்டது–
உன் உயரத்தையே
உயர்த்திவிட்டது தலைவா!

முதலீடுகளை ஈர்க்க வேண்டும் என்னும்
முனைப்போடு சென்ற நீ–
அமெரிக்கத் தமிழர்கள்
அத்தனைபேர் உள்ளத்தையும்
மொத்தமாக
அள்ளிக்கொண்டு
வந்துவிட்டாயே தலைவா!

இனிமேல்
சிகாகோ பேச்சு என்று
பதிவிட்டாலே... .
‘கூகுள்’ உன் பேச்சைத்தான்
குறிப்பிடும் தலைவா!
அந்த அளவுக்கு
சொல்வன்மைத் திறன்கொண்டு
சொக்க வைத்து விட்டாய் நீ!

தலைவா..
தரையிலே அமைந்த
கோட்டைகளை மட்டுமல்ல
ஆகாயத்தில் அமைந்த
அதிசயக் கோட்டைகளையும்
தகர்த்தெறிந்தான்–
‘தூங்கு எயில் எறிந்த
தொடித்தோட் செம்பியன்’ என்னும்
சோழ மன்னன் என்று
சுட்டிச் சொல்கிறது
புறநானூறு.

அவனுக்கு நிகராய்
ஆகிவிட்டாய் நீயென்று
எண்ணத் தோன்றுகிறது எனக்கு!

தரையிலே கோட்டைகட்டித்
தன்னிலை மறந்து
தலைதெறிக்க
ஆடியவர்களை ஒரு
தலைவனாய் நின்று
தகர்த்து விட்டாய் நீ!
அளவு கடந்த வேகத்தில்
அசுரபல மோகத்தில்
ஆகாயக் கோட்டை கட்டி
ஆடிய மனிதர்களையும்
புறங்காண வைத்துப்
போக்கி விட்டாய் நீ!

கோட்டைக் கனவுகளில்
குடியிருக்கும் சக்திகளை
வேட்டையாட வந்த
வித்தகனே..!
உன் கரத்தால்

கலைஞர் விருது பெற்ற
கலிங்கமலைத் தொண்டன் நான்–
கான மயிலாகக்
களிகொண்டு ஆடுகிறேன்!

பிடரிமயிர் சிலிர்த்து எழும்
சிங்கத்தைப் போல
தடையுடைத்துப் பாயும்
படைக்கலனாக
எம்மைப்
படைத்தருளிய
பாசத்தலைவர்
கலைஞரின்
நீட்சியாய் வாழும் உன்
அன்புக் கட்டளையில்,
இந்த வழுதாவூர்த் தொண்டனுக்கு
வரம் போலக் கிடைத்தது..
கலைஞர் விருது!

கலைஞர் அடிசூடி
கலைஞர் புகழ்பாடி
கலைஞர் நிழல்தேடிக்
காலமெல்லாம் ஓடியவன்
உன்
காவியக் கரங்களால்
கலைஞர் விருது பெற்றுள்ளேன்.

வெப்பத்தைப் போக்கி
வெளிச்சத்தைத் தருபவன்நீ!
உஷ்ணத்தை நீக்கி
ஒளியைக் கொடுப்பவன் நீ!
உன்
உன்னதக் கரங்களால்
உயர் விருது பெற்ற
ஒப்பற்ற உணர்வோடு
நன்றி சொல்லி நிற்கிறேன்–
நான்!

அரசுக் கட்டிலுக்கு இணையான
முரசுக் கட்டிலில்
முத்தமிழ்ப் புலவன்
மோசிகீரன் உறங்கும்போது
கன்னித் தமிழின்
களைப்புத் தீரட்டும் என்று
கால்வலிக்க நின்று கைவலிக்கக்
கவரி வீசிய
சேரமான் போல–
காவியத் தலைவர்
கலைஞர் விருதை இந்தக்
கலிங்கமலைத் தொண்டனுக்கு
அளித்து
சிந்தை குளிர்வித்த



டாக்டர் **எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி.**
மேனாள் ஒன்றிய அமைச்சர்

செந்தமிழ்க் கோமானே..
உன்னை எப்படி
போற்றுவது?
உனக்கு
எவ்வண்ணம் நன்றிக்கடன்
ஆற்றுவது?

முத்தையும் முத்தமிழையும்
முகவரியாய்ப் பெற்று
பொலிவுற்று நின்ற
பாண்டிய மன்னன் அரண்மனையில்–
பெரியாழ்வார் பாடப்பாட
பொன்னாயிரம் நிறைந்த
பொற்கிழி
அறுந்து வீழ்ந்ததைப் போல...

கலைஞர் புகழ் பேசுவதையே
கடமையெனக் கொண்டு
அவர்
காலடியில் நின்று
களமாடிய அடியேனுக்கு
பொன்னைவிட மேலான
கலைஞர் விருதை
அன்னை மனத்தோடு
அளித்து மகிழ்ந்திருக்கும்
அமுதத் தலைவா...

உன்னை
ஆயிரம் பூக்கொண்டு
அர்ச்சித்தாலும் என்
ஆசை தீராது தலைவா!

குற்றாலக் குறவஞ்சி பாடிய
திரிகூட ராசப்பக் கவிராயரைக்
குன்றின் மேலேற்றிக்
கொடை கொடுத்த
தலைவன் போல–
கலைஞர் தமிழைக்
கொஞ்சி மகிழ்ந்து
கொண்டாடி வாழ்கின்ற
அடியேனை–
மக்கள் மன்றத்தில் ஏற்றி
மாப்புகழ் தந்திருக்கும்
மாண்புமிகு தலைவா..
உன்னைப்
போற்றிப் பாடுதற்குப்
பொற்றமிழில் சொல்தேடிக்
களைத்துப் போகிறேன்
தலைவா!

சங்க கால மன்னன்
குமண வள்ளல்
ஒரு தமிழ்க் கவிக்கு
தன் தலையைக் கொடுக்க
முன்வந்தது போல–
தமிழுக்காகத் தண்டவாளத்தில்
தலைகொடுத்துப் போராடிய
தலைவன் பெயராலான
தலையாய விருது கொடுத்து–

இந்தத் தமிழவனைத்
தலை நிமிர வைத்த
தங்கத் தலைவா...
உன்னை
என்னென்று பாடுவது
என்னென்று வாழ்த்துவது?

பட்டினப்பாலை பாடிய
உருத்திரங் கண்ணனார்க்கு
கரிகாற் சோழன்
பதினாறு லட்சம் பொன்னைப்
பரிசாகத் தந்து
பாராட்டியது போல–
பல்லாயிரம் மைல்களுக்கு அப்பால்
பயணத்தில் இருந்தபோதும்
இந்த
உண்மை உழைப்பாளியை
உள்ளத்தில் வைத்து
விலைகாண முடியாத
வெளிச்ச விருதை
தன்
வித்தகக் கரங்களால்
வழங்கிக் கௌரவித்த
திராவிடத் தலைவா..

உன் திருவாயால்
திராவிட ஆழ்வார் என்று
தெரிவிக்கப்பட்ட
எளியேன்,
கோடானு கோடி
நன்றிப் பூக்களைக்
குவித்து வைத்து
உன்னை வணங்குகிறேன்
தலைவா!

குற்றாலக் குறவஞ்சியில்
ஒரு பாடல் உண்டு.

**‘ஓடக் காண்பது பூம்புனல் வெள்ளம்
ஒடுங்கக் காண்பது யோகியர் உள்ளம்
போடக் காண்பது பூமியில் வித்து
புலம்பக் காண்பது கிண்கிணிக் கொத்து..’
என்று!**

அதைப் போலவே
கோட்டையிலே நீ
கால்வைத்த நாள்முதலாய்
நாங்கள் காண்பதும்..
இந்த
நாடு காண்பதும்
வெற்றி.. வெற்றி
வெற்றியைத் தவிர
வேறொன்றும் இல்லையே தலைவா!

உன் வெற்றிச் சரிதம் தொடரட்டும்!
உன் வீர வரலாறு வளரட்டும்!

நெருப்பாற்று நீச்சலில்
நீ படைக்கும் சாதனைகள்
நாளும் நாளும் பெருகட்டும்!

வாகைப்பூ சூடும்
உன் வல்லமை
தொடர்ச்சியாய் வெல்லட்டும்!

பாடாண் திணைக்குரிய
பாடு பொருளாய்
உன்
பண்பட்ட அரசியல் பயணம்
நூற்றாண்டு கடந்தும்
நீளட்டும்!

என்றுவரை வானம்
என்றுவரை பூமி
என்றுவரை காற்று
அன்றுவரை உனது புகழ்
அகிலத்தை ஆளட்டும்!

நன்றிகள் கோடி
நவில்கிறேன் தலைவா!

---

### டெல்லி - வக்பு வாரிய சட்டத்திருத்த மசோதா

## நாடாளுமன்ற கூட்டுக்குழு ஆலோசனை!

### 5 மாநிலங்களுக்கு நேரில் சென்று கருத்துக்கேட்க திட்டம்!

புதுடெல்லி, செப். 21- வக்பு வாரிய சட்டத் திருத்த மசோதா குறித்து தமிழ்நாடு உள்ளிட்ட 5 மாநிலங்களுக்கு நேரில் சென்று கருத்துக் கேட்க நாடாளுமன்றக் கூட்டுக் குழு முடிவு செய்துள்ளது.

வக்பு சட்டத்தில் திருத் தங்கள் மேற்கொள்ளும் வகையில் வக்பு வாரிய சட் டத்திருத்த மசோதாவை நாடாளுமன்றத்தில் ஒன் றிய அரசு தாக்கல் செய்துள் ளது. ஒன்றிய அரசின் மசோ தாவிற்கு காங்கிரஸ், தி.மு.க. உள்ளிட்ட கட்சி கள் கடும் எதிர்ப்புத் தெரி வித்து வருகின்றன. இதைய டுத்து வக்பு வாரிய சட்டத் திருத்த மசோதா நாடாளு மன்றக் கூட்டுக்குழுவின் ஆய்விற்கு அனுப்பி வைக் கப்பட்டுள்ளது.

இந்நிலையில் நாடாளு மன்றக் கூட்டுக்குழுவின் கூட்டம் நேற்று நடைபெற் றது. தொடர்ந்து இன்றும் நாடாளுமன்றக் கூட்டுக் குழுவினர் ஆலோசனை மேற்கொள்ள உள்ளனர். நேற்று முன்தினம் நடை பெற்ற கூட்டத்தில் அகில இந்திய முஸ்லிம் சட்டவாரி யத்தின் உறுப்பினர்கள் அழைக்கப்பட்டு அவர் களிடம் கருத்துகள் கேட்கப்பட்டன. மசோதா வுக்கு அகில இந்திய சட்ட வாரியம் கடும் எதிர்ப்பு தெரிவித்ததாக தெரிகிறது. இதனிடையே சட்ட மசோதா குறித்து ஐந்து முக்கிய மாநிலங்களுக்கு நேரில் சென்று கருத்துகளை கேட்க நாடாளுமன்றக் கூட்டுக் குழு முடிவு செய் துள்ளதாக தகவல் வெளி யாகி உள்ளது.

தமிழ்நாடு, கர்நாடகா, தெலுங்கானா, மகாராஷ் டிரா, குஜராத் ஆகிய மாநி லங்களுக்கு நேரில் சென்று கருத்துகளை கேட்க நாடாளுமன்றக் கூட்டுக் குழு முடிவு செய்துள்ளது.

நாடாளுமன்றக்கூட்டுக் குழு உறுப்பினர்கள் இம் மாத இறுதியில் சென்னை, பெங்களூரு, ஹைதராபாத், அகமதாபாத், மும்பை ஆகிய நகரங்களுக்கு நேரில் சென்று கருத்துகளை கேட்டறிய திட்டமிடப் பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளன.

---

### நெல்லை மாநகர தி.மு.க. அலுவலகத்தில் - முப்பெரும் விழாவில் கழக விருது பெற்ற

## நெல்லை பகுதிச் செயலாளர் நமச்சிவாயத்திற்கு பாராட்டு விழா!

### இரா.ஆவுடையப்பன் - டி.பி.எம் மைதீன்கான் பங்கேற்பு!

நெல்லை, செப்.21- முதலமைச்சர் - கழகத் தலைவர் அவர்களின் திரா விட மாடல் ஆட்சியில் நடைபெற்ற கழக முப் பெரும் விழாவில் முதல மைச்சர் அவர்கள் நெல்லை பேட்டை பகுதிச் செயலா ளர் நமச்சிவாயம் என்ற கோபிக்கு கழக விருதினை வழங்கினார்கள். அதனை முன்னிட்டு நெல்லை மாந கர தி.மு.க. அலுவலகத்தில் வருகிற 23.09.2024 திங்கட்கிழமை அன்று மாலை 5 மணி அளவில் நெல்லை பகுதி செயலாளர் நமச்சிவாயத்திற்கு பாராட்டு விழா நடைபெறு கிறது.

இந்நிகழ்வில் நெல்லை கிழக்கு மாவட்டச் செயலா ளர் இரா.ஆவுடையப்பன், நெல்லை மத்திய மாவட்டப் பொறுப்பாளர் டி.பி.எம்.மைதீன் கான் ஆகியோர் பங்கேற்று சிறப் பிக்கின்றனர். என நெல்லை மாநகரச் செயலாளர் சு.சுப் பிரமணியன் தெரிவித் துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:-

முதலமைச்சர் - கழகத் தலைவர் அவர்கள் தென் மண்டலத்தில் சிறந்த பகுதி செயலாளர்களை தேர்வு செய்துள்ளார்கள். அதன் படி 17ம் தேதி சென்னை யில் நடைபெற்ற முப் பெரும் விழாவில் கழகத் தலைவர் - முதலமைச்சர் அவர்கள் திருகரங்களால் நெல்லை பகுதி செயலாளர் நமச்சிவாயத்திற்கு விருது வழங்கினார்கள்.

ஆகவே அவரை பாராட் டும் விதமாக நெல்லை மாந கர தி.மு.க. அலுவலகத்தில் 23.09.2024 திங்கட்கிழமை அன்று மாலை 5 மணி அள வில் எனது தலைமையில் துணைச் செயலாளர் அப் துல் கையூம், பகுதி செயலா ளர்கள் சுப்பிரமணியன் (தச்சை)

அன்டன் செல்லத்துரை (பாளை) துபாய் சாகுல் (மேலப்பாளையம்) ஆகி யோர் முன்னிலையில் நெல்லை பகுதி செயலாளர் நமச்சிவாயம் என்ற கோபிக்கு பாராட்டு விழா நடைபெறுகிறது.

இந்நிகழ்வில் நெல்லை கிழக்கு மாவட்டச் செய லாளர் இரா. ஆவுடையப் பன், நெல்லை மத்திய மாவட்டப் பொறுப்பாளர் டி.பி.எம்.மைதீன்கான், சட்ட திட்டக்குழு உறுப்பி னர் சுப.சீதாராமன், மாநில நெசவாளர் அணி செயலா ளர் சொ.பெருமாள், மாநில மகளிர் தொண்டரணி துணைச் செயலாளர் விஜிலா சத்யானந்த் ஆகி யோர் பங்கேற்று சிறப்பிக்கின்றனர்.

ஆகவே மாநகர கழக, பகுதிக் கழக நிர்வாகிகள், வட்டக் கழகச் செயலாளர் கள், நிர்வாகிகள், கழக மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் மாநகர சார்பு அணி களின் நிர்வாகிகள் அனை வரும் தவறாமல் கலந்து கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரி வித்துள்ளார்.

---

### சேலம் செவ்வாய்பேட்டை வி. சத்தியநாராயணன் தந்தை

## ஜி.வாசுதேவன் முதலாம் ஆண்டு நினைவு நாள்!

### கழகத்தினர் - உறவினர் பங்கேற்பு!



சேலம், செப். 21 - சேலம் மாநகரம் செவ் வாய்பேட்டை பகுதி முன் னாள் அவைத் தலைவரும் மாரியம்மன் கோவில் முன் னாள் அறங்காவலர், செவ் வாய் பேட்டை தி.மு.கழக மூத்த உறுப்பினர், முன் னாள் நகர துணைச் செய லாளர் ஜி. செல்வராஜ் தம் பியும் செவ்வாய்பேட்டை வி.சத்தியநாராயணன் தந்தை, சேலம் மாநகரம் செவ்வாய்பேட்டை கழக மூத்த முன்னோடி ஜி.வாசு தேவன் அவர்களின் முத லாம் ஆண்டு நினைவு நாள் 23.09.2024 திங்கள் கிழமை அன்று அனுசரிக்கப்ப டுகிறது.

நம்பர் 96 சேர்மன் மதுரை தெரு செவ்வாய் பேட்டை சேலம் முகவரி யில் உள்ள சேர்மன் மதுரை தெரு முழுவதும் அலங்க ரிக்கப்பட்டு அங்கு வைக் கப்பட்டுள்ள அன்னாரது திருவுருவப்படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தப்படுகிறது.

இந்நிகழ்ச்சியில் சேலம் மத்திய மாவட்டக் கழக மற்றும் மாநகர கழக நிர் வாகிகள் மற்றும் உறவினர் கள் கலந்து கொண்டு அன் னாருக்கு புகழஞ்சலி செலுத்துகின்றனர்.